# அகல்விளக்கு நாவலில் இளைஞர் வாழ்வியல்

## Youngsters Life in Agalvilakku Novel

**முனைவர் பீ. பெரியசாமி,**

உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, டாக்டர் எம்.ஜி.ஆர். சொக்கலிங்கம் கலைக் கல்லூரி,

ஆரணி, திருவண்ணாமலை- 632317,

மின்னஞ்சல்:periyaswamydeva@gmail.com, கைபேசி:9345315385,

https://orcid.org/0000-0002-7395-9699

**Dr. B. Periyaswamy,**

Assistant Professor, Department of Tamil,

Dr. MGR Chockalingam Arts College, Arni, Thiruvannmalai – 632317,

EMail: periyaswamydeva@gmail.com

**Abstract:** The best family novel composed by the Novel. The article is about Velan, Chandran and Malan. How are the students in the school period? After going to college, they are wrong, love, and misunderstanding. If superstition occurs at a young age, it will take their lives. So who suffers? How these superstitions are due to division in the family and poverty. We cannot determine the knowledge of a person with schooling. We have heard that even those who did not learn school properly went to great positions and went to big positions later. The discipline of one's discipline and the involvement of education and work can make his life pleasant. The article explains these ideas with three characters mentioned above.

**Keywords**: Mu.Va., Agalvilakku, Education, Youngsters life, Job, Superstition, misunderstanding

***ஆய்வுச் சுருக்கம்***

*அகல்விளக்கு நாவல் மு.வ.வால் இயற்றப்பட்ட சிறந்த குடும்பநாவல். இந்நாவலில் வரும் வேலன், சந்திரன், மாலன் ஆகியோரைப் பற்றியதாக இக்கட்டுரை அமைந்துள்ளது. பள்ளிப்படிப்பு காலத்தில் மாணவர்கள் எப்படி இருக்கிறார்கள்? அவர்களே கல்லூரிக்குச் சென்ற பிறகு தவறாக பழக்கம், காதல், தவறான புரிதல் இவற்றால் எப்படி தங்கள் வாழ்வை சீரழித்துக் கொள்கின்றனர்? மூடநம்பிக்கைகள் இளம் வயதில் ஏற்பட்டால் அது அவர்களின் வாழ்வை எப்பேறப்பட்ட நிலைக்குக் கொண்டு செல்கிறது. அதனால் யாரெல்லாம் பாதிக்கப்படுகிறார்கள். குடும்பத்தில் பிரிவு ஏற்படுவதற்கும் வறுமை உண்டாவதற்கும் இந்த மூடநம்பிக்கைகள் எவ்வாறு காரணமாகின்றன. பள்ளிப்பருவ படிப்பை வைத்து ஒருவனின் அறிவை நாம் நிர்ணயம் செய்ய முடியாது. பள்ளிப்படிப்பை சரியாகக் கற்காதவர்கள் கூட பிற்காலத்தில் நன்றாகப் படித்து பெரிய பதவிகளுக்குச் சென்றதை நாம் கேள்விப்பட்டுள்ளோம். ஒருவனின் ஒழுக்கமும் கல்வி, பணி மீதான ஈடுபாடுமே அவனின் வாழ்க்கையை இன்பமயமானதாக மாற்றும். இவ்வாறானக் கருத்துக்களை மேற்கூறிய மூன்று கதாபாத்திரங்கள் கொண்டு இக்கட்டுரை விளக்கியுள்ளது.*

***திறவுச் சொற்கள் :*** *மு.வ., அகல்விளக்கு, கல்வி, இளைஞர் வாழ்க்கை, வேலை, மூடநம்பிக்கை, தவறான புரிதல்*

***முன்னுரை:***

அகல்விளக்கு நாவலில் குடும்பம் சார்ந்த பல சிக்கல்கள் வெளிப்பட்டிருக்கின்றது. அதோடு கூடவே, இந்நாவல் தோன்றிய இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த இளைஞர்களின் வாழ்வியலையும் எடுத்துரைக்கின்றது. இதனை, இந்நாவலில் வரும் வேலன், சந்திரன், மாலன் ஆகிய

பாத்திரப்படைப்புகளின்வழி மு.வ. எடுத்துரைத்துள்ளார். இவர்களின் கல்வி, வேலைவாய்ப்பு, குடும்பம் ஆகியவற்றின்வழி அக்கால இளைஞர்களின் வாழ்வியலை இக்கட்டுரையில் காணலாம்.

**அகல்விளக்கு நாவல்**

அகல்விளக்கு நாவல் மு.வ. அவர்களால் இயற்றப்பட்டது. இது சிறந்த நாவலுக்கான சாகத்ய அகாதெமி விருதினை 1961-இல் பெற்றது. இது ஒரு சிறந்த குடும்ப நாவலாக அறிஞர் பெருமக்களால் கருதப்படுகின்றது. இதன் சிறப்பினை, **இந்த நாவலை மேலோட்டமாக வாசித்தால் வாழ்க்கைக்குத் தேவையான பண்புகளையும் சிறப்புற்றுவாழ பின்பற்ற வேண்டிய நெறிகளையும் இளைஞர்களுக்குப் போதிப்பதுபோல் அமைந்திருக்கும். இருப்பினும் சற்று ஆழமாகப் பார்க்கும்போது வலிய ஆளுமைகளை உருவாக்க உகந்த நுட்பமான சுய சால்புடைமை வலுப்படுத்தலுக்கான கருத்துகள் பரந்து இருப்பதைக் காணமுடிகிறது. வாழ்வில் விழுமியங்கள் இன்றியமையாதது என்றும் அது தரும் மதிப்பு வாழ்க்கையை உயர்த்தும் என்ற சிந்தனையையும் இந்நாவலின்வழி அறியமுடிகின்றது** (கி. இளம்பூரணன் கிராமணி, சி. குமார், ப.108) எனக் கூறுகின்றனர்.

**உத்தி**

நாவலாசிரியர்கள் தங்கள் படைப்புகள் வாசர்களுக்கு சலிப்பு ஏற்படாதவாறும் கவர்த்திழுக்கச் செய்யும்படியும் அமைக்க பல உத்திகளைக் கையாள்கின்றனர். அவற்றுள் ஒன்றுதான் கதை கூறும் உத்தி. இதில் தலைமை கதைமாந்தரான வேலனே கதை கூறும்படியான உத்தி அமைக்கப்பட்டுள்ளது.

**வேலன்**

வாலாசா பேட்டையில் வசித்து வருபவன். இவனின் அப்பா மளிகை கடை ஒன்று நடத்தி வருகிறார். அம்மா குடும்பத்தைக் கவனித்து வருகிறார். தங்கை மணிமேகலை. நல்ல குணமுடையவள். பள்ளிக்கூட கல்வியின் போது சுமாரான மாணவனாகவும் கல்லூரி படிக்கும் காலத்தில் சிறப்பான மாணவனாகவும் இருந்தவன். தன் அத்தை மகளைத் திருமணம் செய்துக் கொண்டான். கூட்டுறவு வங்கியில் எழுத்தராகப் பணியாற்றி வருகின்றான். ஒரு மகளுண்டு. இவனுக்கு பள்ளிகூடத்தில் சந்திரன் என்பவனும் கல்லூரியில் மாலன் என்பவனும் நண்பர்கள்.

**சந்திரன்**

பணக்கார வீட்டுப்பிள்ளை, அப்பாவிற்கு இவனை எட்டாம் வகுப்புக்கு மேல் படிக்க வைக்க விருப்பமில்லை. ஆசிரியரும் கல்வி அதிகாரியும் பேசி சம்மதிக்க வைத்தனர். அதனால், வாலாசாப்பேட்டைக்கு மேல் படிப்புக்காக குடியேறினான். ஆங்கிலத்தைத் தவிர மற்ற பாடங்களில் முதல் மாணவன் என்பதால் நல்ல மதிப்பெண் பெற்று சென்னையில் கல்லூரிப் படிப்பைத் தொடர்ந்தான். பாடத்தில் கவனக் குறைவு, காதல், தீய நண்பர்களின் பழக்கம் எனப் பலவும் உண்டானது. ஒருதலைக் காதலால் படிப்பை பாதியில் விட்டுவிட்டு யாருக்கும் சொல்லாமல் விடுதியை விட்டு சென்றுவிடுகிறான். அவன் நினைவிலேயே தாய் இறந்துவிடுகிறாள். பிறகு தேடி கண்டுபிடித்து திருமணம் செய்து

வைக்கின்றனர். தவறான பெண்களின் பழக்கத்தால் வாழ்க்கையும், உடலும் வீணாய் போகின்றன. கடைசியில் தொழுநோயால் இறந்துவிடுகிறான்.

**மாலன்**

வேலனின் கல்லூரி நண்பன் மூடநம்பிக்கைகள் அதிகம் கொண்டவன். கடவுளை வழிப்படுவதால் தான் அனைத்தும் நடக்கிறது என்று நம்புபவன். சோதிடம், மாந்திரிகம் போன்றவற்றில் நாட்டம் உடையவன். சோதிடத்தின் நம்பிக்கையால் படிப்பு முடியும் முன்பாகவே திருமணம் செய்துக் கொண்டவன். வேலனைப் போல தானும் அதிக சம்பளத்தில் வேலைக்குச் செல்ல முடியவில்லை எனும் ஒருவித பொறாமை கொண்டவன். அதுமட்டுமின்றி செம்பு, பித்தளை, இரும்பு ஆகியவற்றை பொன்னாக மாற்றவதாக கூறிய சாமியாரிடம் தமது செல்வங்களையெல்லாம் இழந்தவன். பின் திருந்தி நல்ல நிலைக்கு ஆளாகிறான்.

**அழகும் கல்வியும்**

அழகுக்கும் கல்விக்கும் தொடர்பில்லை என்பதை பலர் கூற நாம் கேள்விபட்டிருக்கிறோம். உதாரணமாக இன்றளவும் கிராமப்புறங்களில் அழகிய மாடு உழவுக்குக் கேடு எனக் கூறுவதைக் கேட்டிருக்கிறோம். ஆனால் எப்போதும் நம்மவர்களிடம் ஓர் எண்ணம் உண்டு. தன்னைவிட அழகானவன், நுனி நாக்கில் ஆங்கிலம் பேசுபவன் அறிவாளி என்று நம்பும் குணம். ஆனால் அது அப்படியல்ல யாருக்கும் நாம் சலைத்தவர்கள் அல்ல என்பதை நாம் உணர வேண்டும். கல்வியின் இயல்பினை,

**குஞ்சி யழகும் கொடுத்தானைக் கோட்டழகும்**

**மஞ்சள் அழகும் அழகல்ல – நெஞ்சத்து**

**நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையால்**

**கல்வி அழகே அழகு. (நாலடி.131)**

என்கிறது நாலடியார்.

அவ்வாறுதான் வேலனைக் காட்டிலும் சந்திரன் அழகான உடலமைப்புக் கொண்டவன். அவனைக் கண்ட கல்வி அதிகாரி ஒருவர் அந்த வகுப்பு ஆசிரியரிடம், **இவன் படிப்பில் எப்படி இருக்கிறான்? என்றார். மிக நான்றாகப் படிக்கிறான் என்று ஆசிரியர் மறுமொழி கூறியதும், பார்த்தீர்களா? நான் அப்படிதான் நினைத்தேன்.** (அகல்விளக்கு, ப.24) என்று அவன் உடல்வாகு கொண்டே முடிவெடுத்துச் சொல்லி செல்கிறார். இதனால், வேலனுக்கு தான் அழகாக இல்லை என்றும் அவனுக்கு நிகராக நம்மால் கல்வியில் சிறப்பாக செயல்பட இயலவில்லை என்றும் ஒருவித தாழ்வுமனப்பான்மை எழத்தொடங்குகிறது.

**நகரத்துப் பழக்கமும் கல்வியும்**

கல்விக்காக பெரிய நகரங்களுக்கு செல்பவர்கள் யாரும் சரியாக திரும்புவதில்லை. அங்கு போன பிறகு பல்வேறு தீய பழக்கங்களுக்கு ஆளாகின்றனர். இதனால் பணம் விரையமாவதுடன். குடும்பமும் நிம்மதி இழந்துபோகிறது. அதனால், தன் மகனை நகரத்திற்கு அனுப்ப சாமண்ணா தயக்கம் காட்டுகிறார். அது மட்டுமன்றி அவரது தம்பியும் நகரத்திற்கு சென்றதால் பல்வேறு கேடுகளுக்கு ஆளாகியிருந்தார். இதனால், **நகரம் என்று சொல்லக் கேட்டதும் அவர்க்குத் தம் தம்பியின் சீர்கேடு நினைவுக்கு வரும். உடனே அவர்களைப் பார்த்து, நீங்கள் சொல்கிறீர்கள். நானும் பார்த்திருக்கிறேன். பட்டணத்துப் பக்கம் போனால் பிள்ளைகள் கெட்டுப்போகாமல் திரும்புவதில்லை. அங்கே போய்ச் சிலநாள் தங்கி வந்தால் போதும், சினிமா, ஓட்டல், கச்சேரி, ஆட்டகாரிகள், குதிரைப்பந்தயம் இப்படிப் படிப்படியாகப் கெட்டுப்போய்க் கடைசியில் ஓட்டாண்டியாவதற்கு வழி தேடிக் கொள்கிறார்கள். அந்தப் பட்டணத்து வாழ்வும் வேண்டா, அதனால் வரும் படிப்பும் வேண்டா.**(அகல் விளக்கு, ப.29) என்று தன் மகன் படிப்பு பற்றி பேச வருபவர்களிடம் கண்டிப்பாகச் சொல்லி வந்தார்.

### சந்திரனின் பள்ளிப்படிப்பு

சந்திரனின் தந்தை ஒருவழியாக வாலாசாப்பேட்டை சென்று சந்திரன் படிக்க ஒப்புக் கொண்டார். உடன் அவனது அத்தையையும் வேலையாள் ஒருவனையும் துணைக்கு அனுப்பி அங்கேயே வீடு எடுத்து படிக்கவும் ஏற்பாடுகளைச் செய்து வைத்தார். அந்த ஏற்பாடுகள் எல்லாம் முடிந்து சந்திரனும் பள்ளிக்குச் செல்ல ஆரம்பித்துவிட்டான். அப்போது ஒருநாள் வேலனைப் பார்த்து, **சந்திரன் படிப்பை நான் கவனித்துப் கொள்ள வேண்டும் என்று சாமண்ணா சொன்னார் அந்த நிலையில் அவன் இல்லை. ஆங்கிலம் தவிர எல்லாப் பாடங்களிலும் அவனே முதன்மையாவனாக இருந்தான்.** (அகல்விளக்கு.ப.42) என்பதால் அவன் படிப்பில் ஒன்றும் குறையின்றி படித்து வந்தான் என்பதை வேலனின் உரையாடலிலிருந்து அறிய முடிகின்றது. அதுமட்டுமன்றி அவர்கள் இருவரும் நன்றாகப் படித்து வெற்றியும் பெற்றனர்.

**பள்ளிக்கூடம் திறந்தவுடன் நானும் சந்திரனும் மேல் வகுப்பில் உட்கார்ந்தோம். அங்கே தலைமையாசிரியர் வந்து, சந்திரன்! என்று பெயரைக் கூப்பிட்டு, அவனிடம் வந்து முதுகைத் தட்டிக்கொடுத்தார் எல்லாப்பாடத்திலும் இவன்தான் முதன்மையான எண்கள் வாங்கியிருக்கிறான். இவன் எதிர்காலத்தில் மிகச் சிறந்து விளங்குவான். நம் பள்ளிக்கூடத்துக்கும் இவனால் நல்ல பெயர் கிடைக்கும். இப்படியே படித்து வந்தால், அடுத்த ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சியில் மாநிலத்திலேயே முதல்வனாகத் தேற முடியும்.** (அகல்விளக்கு, ப.81) என்று சந்திரனை வெகுவாகப் பாராட்டிச் சென்றார்.

### சந்திரனோடு வேலனை ஒப்பிடல்

வேலன் சுமாராகப் படிக்கக் கூடியவன். சந்திரன் வகுப்பில் முதல் மாணவன். சந்திரன் கிராமத்திலிருந்து வந்து வாலாசாபேட்டையில் தங்கி படித்து வருகிறான். இந்நிலையில், **கால் ஆண்டு தேர்வு முடிந்த பிறகு, என்(வேலனின்) தந்தையார் சந்திரன் பெற்ற எண்களையும் என் எண்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, சே இவ்வளவுதானா நீ! கிராமத்துப் பையன் ஒருவன் வாங்குற மார்க்கும் நீ வாங்கவில்லையே. நீ எப்படி முன்னுக்குவர போகிறாய்? என்று வெறுத்தார். எல்லாவற்றிலும் பாஸ் மார்க் வாங்கியிருக்கிறேன் பார் என்று சொன்னேன்... அன்றைக்கு எனக்கு அந்த தேர்வு**

**எண்களின்மேல் ஏற்பட்ட வெறுப்புக்கு அளவில்லை.**(அகல்விளக்கு, ப.43) நாம் எப்போதும் கூறுவதுதான். தொடர்ந்து பெற்றோர்களிடம் வலியுறுத்தி வருவதுதான் மதிப்பெண்கள் ஒருவரின் வாழ்வை நிர்ணயிப்பதில்லை. மாறாக, அவர்களின் நடத்தைகளே வாழ்வை நிர்ணயிக்கின்றன. ஒவ்வொருவருக்கும் ஒவ்வொருவித திறமைகள் உண்டு. அது அவர்களிடம் வெளிப்படும்போது தானாகவே அவர்கள் வாழ்வில் வெற்றி பெறுவர். கல்வி என்பது வாழ்க்கைக்கு ஊன்றுகோலே தவிர அது வாழ்க்கையல்ல என்பதை இன்று பலரும் உணர வேண்டும். அவ்வாறு உணர்ந்தால் மற்ற பிள்ளைகளோடு தம் பிள்ளையை ஒப்பிடமாட்டார். இவ்வாறு ஒப்பிடுவதால் போட்டி மனப்பாண்மை உருவாவதற்கு பதிலாக பொறாமைகள் உண்டாகிவிடும். அதனால் பிள்ளைகளில் வாழ்வும் சீரற்று போய்விடும் என்பதை அனைவரும் கவனத்தில் கொள்ளுதல் நலம்.

**சிறப்புப்பாடம் தேர்ந்தெடுத்தல்**

உயர்வகுப்பில் சிறப்புப்பாடம் தேர்ந்தெடுப்பதில் வேலனும் சந்திரனும் ஆழ்ந்திருந்தனர். சந்திரன் கணக்கில் நல்ல மதிப்பெண் எடுத்திருந்தான். வேலனோ அவ்வாறு இல்லை. அவர்கள் கணக்கு ஆசிரியரைச் சந்திக்க சென்றனர். **எங்களைக் கண்ட கணக்கு ஆசிரியர் வாய்திறக்காமல் தலையை மெல்ல அசைத்தார். வரலாம் என்பது அதன் பொருள். அணுகி நின்றோம். கண்ணால் ஒரு வகையாகப் பார்த்து மறுமடியும் தலை அசைத்தார். என்ன காரணமாக வந்தீர்கள்? என்பது அதன் பொருள். சந்திரன் வாய்திறந்து, நான் சிறப்புப் பாடமாகக் கணக்கைத் தேர்ந்தெடுக்க விரும்புகிறேன் என்றான். ஆசிரியர் வாய் திறந்து, சரி என்றார். மறுபடியும் சந்திரன், இவனும் கணக்கு வேண்டும் என்கிறான் என்றான். மார்க் முப்பத்தாறு ஆசிரியர் உதட்டைப் பிதுக்கினார். பயன் இல்லை என்பது அதற்கு பொருள். நாங்கள் இருவரும் ஒரே தெருவில் பக்கத்துப் பக்கத்தில் இருந்து படிக்கிறோம். அதனால் ஒரே பாடமாக இருந்தால். இவ்வாறு சந்திரனே பேசினான் நான் வணக்கமாக வேண்டிக்கொள்ளும் முறையில் நின்றேன். நீ சொல்லித் தருவாயா? என்றார் ஆசிரியர். சொல்லித்தருவேன் என்றார் சந்திரன். சரி போ என்று சொன்னார்.** (அகல்விளக்கு, பக்.84 - 85) அதனால் இருவரும் கணக்கையே சிறப்புப் பாடமாக எடுத்துப் படித்தனர். இங்குக் கூறப்பட்டுள்ள வேலனின் நடத்தையை தான் வள்ளுவர்,

**உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றுங் கற்றார்**

**கடையரே கல்லாதவர். (குறள்.395)**

என்கிறார்.

**வேலனுக்கு சந்திரன் உதவுதல்**

சந்திரன் பள்ளி முடிந்த பிறகு மாலையில் வேலனுக்கு கணக்குச் சொல்லி கொடுத்தான். இதனை, **சந்திரன் எனக்கு மிகப்பெரிய துணையாக இருந்து உதவினான். மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பும் போதே சில சந்தேகங்களை எல்லாம் தீர்த்து உதவினான். கணக்கு ஒரு கடினமான பாடம் என்ற பயமே பறந்து போயிற்று** (அகல்விளக்கு, ப.86) என்று சந்திரனின் உதவியை எடுத்துரைக்கிறான். இதனால் சந்திரனுக்கு கணக்கு பாடத்தை கற்றுக் கொண்டான்.

**பெண்கல்வி**

பெண்கல்வி என்பது எட்டா கனியாகவே பத்தொன்பதாம் நூற்றாண்டிலும் இருந்துள்ளது. என்பதை இந்நாவல் தெளிவாக எடுத்துரைக்கின்றது. **என்(வேலன்) அத்தை மகள் கயற்கண்ணி அவள் ஐந்தாவது தான் படித்து வந்தாள். அந்த ஊரில் ஐந்தாவதுக்குமேல் படிக்க வகுப்பு இல்லாத காரணத்தால் என் மகளுக்குடைய படிப்பு இதோடு முடிந்துவிட்டது. நீ சீக்கிரம் படித்து முடித்து இவளைக் கல்யாணம் செய்துக்கொள் என்று அத்தை என்னைப் பார்த்துச் சொல்லிச் சிரித்தால்** (அகல்விளக்கு ப.55) என்று வேலன் கூறுவதிலிருந்து பெண்களுக்கு திருமணம் செய்து வைக்கவே பெற்றோர்கள் விரும்பினர் என்பதும் படிக்க வைப்பதில் அவர்கள் ஆர்வம் காட்டவில்லை என்பதும் அறிந்துக்கொள்ள முடிகின்றது. மேலும், **நீ படித்து என்ற என்ன செய்ய போகிறாய்? அதைச் சொல் நீ ஒன்பதாவது பத்தாவது படித்தால், மாப்பிள்ளை பி.ஏ. எம்.ஏ படித்தவனாகப் பார்க்கனும் அவன் தலையோ ஆகாசத்திலே பார்க்கும்** (அகல்விளக்கு, ப.93) என்று சந்திரனின் அத்தை அவனின் தங்கை கற்பகத்திடம் கூறுகிறாள். அதிகம் படித்தால் மாப்பிள்ளை கிடைப்பதில் சிக்கல் ஏற்படும். வரும் மாப்பிள்ளைகளின் நடத்தைக்கு நம்மால் ஈடுகொடுக்க இயலாது என்று கருதியுள்ளனர் என்பதும் இதன் வாயிலாக அறியமுடிகின்றது. ஆனால், பாரதிதாசனோ பெண்கல்வி குறித்து கூறுகையில்,

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**குடித்தனம் பேணுதற்கே!**

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**மக்களைப் பேணுதற்கே!**

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**உலகினைப் பேணுதற்கே!**

**பெண்கட்குக் கல்வி வேண்டும்**

**கல்வியைப் பேணுதற்கே! (குடும்பவிளக்கு, ப.48)**

என்று பெண்கல்வியின் சிறப்பினையும் தேவையினையும் எடுத்துரைக்கிறார்.

**எஸ்.எஸ்.எல்.சி**

எஸ்.எஸ்.எல்.சி. இறுதி தேர்வும் நெறுங்க ஆரம்பித்தது. வேலனுக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது. அதனால் அவன் படிப்பும் பாதித்தது. **நன்றாகப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் எனக்கு நிறைய இருந்தது. ஆனால் படிக்க உடம்பு இடம் தரவில்லை. சோர்வு மிகுதியாக இருந்தது. மறுபடியும் காய்ச்சல் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என்று அம்மாவும் அப்பாவும் விழிப்பாக இருந்தார்கள். காலையில் எழாதபடி தடுத்தார்கள்** (அகல்விளக்கு, ப.100). அதனால், நான் தேர்ச்சி

பெறவில்லை. சந்திரன் தேர்ச்சி பெற்றான். அவனுடைய தகப்பனார் அவனைச் சென்னையில் இருக்கும் ஒரு கல்லூரியில் சேர்த்தார்.

பிறகு வேலன் அதே வகுப்பில் பயிலத் தொடங்கினான். அவன் கால் தேர்வுக்குப் பிறகு சந்திரனைக் காண அவன் ஊருக்குச் சென்றிருந்தான். அப்போது சந்திரனின் கல்லூரித் தலைவரிடமிருந்து வந்த கடிதத்தில் அவன் கால் தேர்வில் பெற்ற எண்களை எழுதி படிப்பும் போதாது அக்கறை கொள்ள வேண்டும் என்ற குறிப்பும் சேர்க்கப்பட்டிருந்தது. அதனை அவன் அப்பாவிடம் சொன்னான். அவரும் வருத்தப்பட்டார். பின்னர், வேலன் தேர்வு முடிவும் வந்தது. அவன் தமிழ் கணக்கு இரண்டு பாடங்களிலும் முதன்மை பெற்று எஸ்.எஸ்.எல்.சி.யில் தேறினான்.

**கல்லூரி படிப்பு**

கல்லூரி சேர அப்பாவிடம் ஒப்புதல் வாங்கிவிட்டு, சந்திரனிடம் தெரிவித்தேன். **அவன் கல்லூரில் சேர்வதற்கு உரிய வழிகளைக் காட்டிப் பதில் எழுதினான். நானும் இண்டர்மீடியட் இரண்டாம் வகுப்பில் தேறியுள்ளதாக எழுதியிருந்தான்.** (அகல்விளக்கு, ப.116) வேலனும் கல்லூரியில் சேர்ந்தான். அந்த, **கல்லூரியின் புதுவாழ்வில் பழகுவதற்கு எனக்கு ஒரு மாதகாலம் ஆயிற்கு சந்திரன் அவ்வப்போது எனக்குத் துணையாக வந்து உதவினான்**(அகல்விளக்கு, ப.117). இருந்தாலும் அது பழைய வாலாசா நட்பைப் போன்று இல்லை. அவனிடம் பல மாறுதல்கள் காணப்பட்டன என்பதை, **வாலாசாவில் இருந்தபோது எல்லா வகையிலும் என்னைப் போலவே நடந்து எனக்கு உற்ற தோழனாக இருந்த சந்திரனிடத்தில் ஏற்பட்ட மாறுதல்களைக் கண்டு என் உள்ளம் நொந்தது** (அகல்விளக்கு, ப.119) என்பதிலிருந்து வேலன் தன் நண்பன் சந்திரனைக் கண்டு வருந்தியதை அறிய முடிகின்றது.

சந்திரன் வேலனிடையே கருத்துமாறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. ஒருநாள் சந்திரன் வேலனிடம், **என்ன! படிப்பு எல்லாம் எப்படி இருக்கிறது? என்று நல்ல மனநிலையோடு கேட்டான். ஒருவகையாக இருக்கிறது. நீதான் சொல்லித்தருவதில்லையே, உன்னை இங்கே பார்ப்பதே அரிதாக இருக்கிறதே என்றேன். எனக்கு எத்தனையோ வேலை! என்று நேரே என் முகத்தைப்பார்க்காமல் வேறு எங்கோ பார்த்துச் சொன்னான். நாம் இங்கே வந்தது படிப்புக்காகத் தானே? வேறு கடமைகள் எதற்காக? கல்லூரி என்றால் படிப்பு மட்டுமா? அதுதான் முக்கியம் அது நல்லபடி முடிந்தால்,ஓய்வு இருந்தால் மற்றவற்றை அளவாகக் கவனிக்கலாமல். ஒ! எனக்கு அறிவுரை சொல்ல வந்துவிட்டாயா?** (அகல்விளக்கு, ப.120)என்று சந்திரன் வேலனைக் கடிந்துக் கொண்டான்.

வேலனுக்கு மாலன் என்றொருவன் அறிமுகமாகி பிறகு நல்ல நண்பகளாக மாறுகின்றனர். அப்போது மாலன், **பெற்றோர்கள் எவ்வளவோ துன்பப்பட்டுப் பணம் அனுப்புகிறார்கள். நாம் பொறுப்போடு படிக்க வேண்டாவா? என்றான். ஆமாம் என்றேன். அதில் எவ்வளவு பணத்தை வீண் செலவு செய்கிறார்கள்? புகைக்குடிக்கு எவ்வளவு பணம் செலவாகிறது.** (அகல்விளக்கு, ப.124)என்று கூறினான். அதில் அவனுடைய படிப்பு மீதான ஆர்வமும் தீய பழக்கம் இல்லாதவன் என்பதும் புரிந்துக் கொண்ட வேலன் அவனோடு நெருங்கிப் பழக ஆரம்பித்தான். பிறகு அந்த ஆண்டு தேர்வு முடிவு வந்தது.

வேலனும் மாலனும் இரண்டாம் வகுப்பில் தேறினர். பின் கல்லூரியில் பி.ஏ சேர்ந்தனர். மாலனுக்கு திருமணம் பி.ஏ முடிக்கும் முன்பாகவே நடந்தது.

வேலன் பி.ஏ தேர்வு நன்றாக எழுதினான். மாலன் திருமணம் நடந்திடவே நம்பிக்கையில்லாமல் இருந்தான். தேர்வு முடிவுக்களும் வந்தன. **அவன் (மாலன்) முதல் இரு பகுதியிலும் தேறி மூன்றாம் பகுதியில் தவறிவிட்டான். நான்(வேலன்) முதல் பகுதியில் மூன்றாம் வகுப்பாகவும் இரண்டாம் பாதியில் இரண்டாம் வகுப்பாகவும் மூன்றாக பகுதியாகிய காணக்கில் முதல் வகுப்பாகவும தேறி இருந்தேன். அப்பா உள்ளத்துள் ஏற்பட்ட மகிழ்ச்சியை எல்லாம் அடக்கிக் கொண்ட வேண்டுமென்றே, முதல் பகுதியில் ஏன் முதல் வகுப்பில் தேறவில்லை என்று கேட்டார். ஆங்கிலம் தாய்மொழி அல்ல என்றும் தாய்மொழியில் தருவதில்லை என்றும் சொல்லி தப்பித்துக் கொண்டேன்** (அகல்விளக்கு, ப.291) கல்லூரிப் படிப்பும் முடிந்தது.

**மூடநம்பிக்கை**

மாலனிடம் அவன் படிக்கும் காலத்திலிருந்தே பல்வேறு மூடநம்பிக்கைகள் குடிகொண்டிருந்தன. அவற்றுள், **ஒரு ரிஷியின் பெயரைச் சொல்லி, அவருடைய பெயரைப் பதினேழு முறை வாழ்த்தியிருந்தது. அதன் கீழே இதைப் பார்ப்பவர்கள் இதைப் போல் ஐந்து எழுதித் தமக்குத் தெரிந்த ஐந்து பேருக்கு அனுப்ப வேண்டும் என்றும், அவ்வாறு இருபத்து நான்கு மணிநேரத்தில் தபாலில் அனுப்பி வைத்தால் இந்த ரிஷிகுல வட்டத்துக்கு உதவி செய்த புண்ணியம் உண்டாகும் என்றும், அதனால் எண்ணிய காரியம் கைகூடும் என்றும் குறித்திருந்தது.** (அகல்விளக்கு, ப.127) இதனை அவன் முழுமையாக நம்பினான். நம்பவில்லை என்றால் தீமை உண்டாகும் என்றும் வேலனிடம் கூறினான். தற்காலத்தில் கூட கடவுளரின் புகைப்படங்களைச் சமூக ஊடகங்களில் அனுப்பி இதனை உடனடியாக பத்து நபர்களுக்கு பகிரவும் அப்படி பகிர்ந்தால் உடனடியாக தங்கள் துன்பங்கள் விலகும். இல்லையென்றால் பத்துநாட்களில் மிகத்துயரமாக செய்தி உங்களை வந்துசேரும் என்று வருவதைக் கண்டிருப்போம். இந்த மூடநம்பிக்கைகளுக்கு படித்தவன், படிக்காதவன், பணக்காரன், எழை என்ற பேதங்கள் எல்லாம் இல்லை. இது இன்றளவும் இருந்து கொண்டுதான் உள்ளது.

அதேபோல், **ஒருநாள் மாலை அவன் (மாலன்) என்னிடம் வந்து, வேலு! கோயிலுக்குப் போய் வருவோம் என்றான். நான் இசைந்து எழுந்தேன். வழியில் அவன், மற்றவர்கள் யாருக்கும் சொல்லாதே நான் எப்போதும் தேர்வுக்கு முன் ஒர் அருச்சனை செய்வது வழக்கம். அதோடு ஒரு பிரார்த்தனை செய்து கொண்டு தேர்வு வெற்றி எனத் தெரிந்தவுடனே போய் அந்தப் பிரார்த்தனையைச் செய்துவிட்டு வருவேன். எஸ்.எஸ்.எல் சியும் அப்படித் தான் தேறினேன். இப்போது அதற்காகத்தான் போகிறேன். நீயும் தேர்வை முன்னிட்டு அருச்சனை செய், ஒரு பிரார்த்தனையும் செய்துகொள் என்றான்.** (அகல்விளக்கு, ப.155) இது தன்மீது நம்பிக்கை இல்லாமல் கடவுளே அனைத்திற்கும் காரணம் என்று அவன் நம்பியதற்கு சிறந்த எடுத்துக்காட்டு.

தன் வாழ்வில் நடக்கும் அனைத்து நடத்தைகளும் கிரகப் பலன்களை மையமிட்டுதான் நடைபெறுகிறது என்று மாலன் நம்பினான். உதாரணமாக, **மாலன் மறுநாள் காலைப் பயணத்துக்காகப் புத்தகங்களைப் பெட்டியில் அடுக்கி வைத்துக் கொண்டிருந்தான். என்னைக் கண்டவுடன், "நான்**

**தேறிவிடுவேன்" என்று மகிழ்ச்சியான செய்தியைச் சொன்னான். நான் பாராட்டுத் தெரிவித்து விட்டு, "செய்தி எப்படித் தெரிந்தது? இதற்குள் தெரிவதற்கு வழி இல்லையே. ஆசிரியர் சொன்னாரா? என்றேன். "சோதிடம் கேட்டேன்" என்றான். "சோதிடக் காரனுக்கு நீ எழுதியது எப்படித் தெரிந்து! என்று சிரித்தேன். "குருதசை நன்றாக இருக்கிறது வக்கிரம் இல்லாமல்" என்றான்.** (அகல்விளக்கு, ப.195) இதனால் மாலன் அதிக மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்ததை நம்மால் அறிய முடிகின்றது.

**காதல்**

சந்திரன் பெண் வேடமிட்டு நடித்தான் மிகவும் சிறப்பாக இருந்தது. அதனைக் கண்ட அனைவரும் இரசித்து பாராட்டினர். **சிறிது நேரத்தில் சந்திரன் விரைந்து வந்தான். வழியில் நின்ற என்னைப் பார்த்தான். ஆனால், அவனுடைய கண்கள் யாரையோ தேடின. என்னைக் கடந்து அந்தப் பெண்கள் இருந்த இடத்திற்குச் சென்று, மிகவும் நன்றி! எவ்வளவு நேரம் இருந்தீர்கள் என்றான். அவர்களுள் ஒருத்தி மிகமிக நன்றாக இருந்தது உங்கள் நடிப்பு பெரிய வெற்றி எங்களுடைய பாராட்டுகள்.** (அகல்விளக்கு, ப.132, 133) என்றாள். வேலன் யார் இவள் என்று தெரியாமல் தடுமாறினான். மாலன் வந்து இதுதான் காதல் என்றான்.

ஒருநாள் சந்திரனின் அறையில் அழுகை குரல் கேட்டது. வேலன் போய்ப் பார்த்தேன். அப்போது சந்திரன் அவனை நோக்கி, **வேலு! மோசம் செய்து விட்டாளே? என்று அறையின் கதவைத் திறந்தான். கண்கள் அழுது அழுது சிவந்திருந்தன. முகம் வீங்கியிருந்தது. உடனே படுக்கையில் இருந்த கடிதத்தை எடுத்து நீட்டியபடியே, படி, படித்துப் பாரடா என்றான்.** (ப.158) அக்கடிதத்தை இமாவதி எனும் பெண் எழுதியிருந்தால் அவளுக்கு திருமணம் என்றும் அத்துடன் திருமண பத்திரிகையும் இணைத்திருந்தது. அவளை திருமணம் செய்து கொள்ள சந்திரன் விரும்பியுள்ளான். ஒருதலையாக காதலித்துள்ளான். ஆனால், அவள் இவனைக் காதலிக்கவில்லை. அவள் வேறொருவனைத் திருமணம் செய்துகொள்ளப்போகிறாள். அதனால் இவன் மனமுடைந்து அழுகிறான் என்பதை வேலன் அறிந்துக் கொண்டான்.

அவனை எப்படியெல்லாமோ தேற்ற வேலன் முயன்றான். அத்தனையும் தோல்வியையே சந்தித்தன. **உனக்கும் காதல் என்றால் என்ன என்று தெரியாது நீ ஒரு மண்டு, உணர்ச்சியற்ற மரம் என்றான். இருக்கலாம். ஆனால் இது காதல் அல்ல. அவள் கலங்கவில்லை. நீ மட்டும் இப்படி அழுகிறாய் இது வா காதல்? அவள் விரும்பவில்லை. நீ மட்டும்.. சந்திரனுக்கு கோபம் வந்தது. அழுது சிவந்த கண்களே கோபக் கண்களாக மாறி என்னைப்பார்த்து எனக்கு அறிவுரை சொல்ல வந்துவிட்டாயா? எழுந்து போ என்றான் மறுபடியும் குப்புறப்படுத்து, பைத்தியமா! நீயா இப்படிச் சொல்கிறாய்? என்றுச் சொல்லிக் கொண்டே அழுதான்.** (அகல்விளக்கு, ப.168) இதனால் அவனை தேற்ற வழியறியாமல் வேலன் தவித்தான்.

சந்திரன் வேலனிடம், **நீ அப்பாவுக்கு எழுதிவிடு. நான் தேர்வுக்குப் படிக்கப் போவதில்லை. ஊருக்கும் வரப்போவதில்லை என்று எழுதிவிடு** (அகல்விளக்கு, ப.161)என்று சொன்னான். அதன்படியே அடுத்த நாள் விடுதியிலிருந்து காணாமல் போய்விட்டான். எங்கு தேடியும்

கிடைக்கவில்லை. அவனுடைய தந்தை சாமண்ணா பயந்தது போலவே இவனுடைய வாழ்வும் தடம்மாறி போனது.

**வேலை**

கல்லூரி படிப்பு முடிந்த பிறகு வேலன் வேலைக்கு முயற்சி செய்துக் கொண்டிருந்தான். அவனுக்கு, **எதிர்ப்பாராத வகையில், என்னை நேரில் வருமாறு சர்வீஸ் கமிஷன் அடைத்திருந்தது. அவர்கள் கேட்ட வீனாக்களுக்குத் தக்க விடைகள் தந்தேன். சில நாட்களுள் வேலைக்கு உத்தரவும் வந்தது. கோயமுத்தூரில் கூட்டுறவு துணைப்பதிவாளராக வேலை வந்திருந்தது**. (அகல்விளக்கு, ப.293) அங்கு சென்று அப்பதவியை ஏற்று சிறப்பாகப் பணியாற்றி வந்தான். அங்குச் சென்றதும் மாலனிடமிருந்து கடிதம் வந்திருந்தது. அதில் தனக்கு வேலை கிடைக்கவில்லை என்பதைக் குறித்து வருந்தி எழுதியிருந்தான். வேலனிருக்கும் கூட்டுறவுத் துறையிலேயே தனக்கும் வேலை தேடித் தருமாறு கோரி இருந்தான். வேலனும் நண்பராகிய நகர்மன்றத் தலைவரிடம் அவனுடைய நிலையைக் கூறி, **சென்னையில் கூட்டுறவு துறையில் நூறு ரூபாய் வருவாயில் இன்ஸ்பெக்டர் தொழில் பெற்றுத் தந்தார். மாலனுக்கு அதுவும் பெரிய மனக்குறையாக இருந்தது. நான்(வேலன்) முந்நூறு ரூபாய்க்கு மேல் சம்பளம் பெற, என்னுடன் என்னைப்போல் படித்த ஒருவன் நூறு ரூபாயளவில் நின்றது யாருக்குத்தான் வருத்தமாக இருக்காது? ஆனாலும் என்ன செய்வது? வேறுவழி இல்லையே என்று அத்தொழிலில் கொஞ்ச காலம் மனம் பொருந்தி இருக்குமாறு மாலனுக்குக் கடிதம் எழுதனேன்** (அகல்விளக்கு, ப.326). ஆனால், அவன் பெரிய வருவாய் காண வேண்டும் என்ற பேராசையில் அந்த வேலையை உதறிவிட்டு. அரிசி ஆலை நடத்தி நட்டம் அடைந்தான். பித்தளையைத் தங்கமாக மாற்றுகிறேன் என்று சொன்ன சாமியாரிடம் சிக்கி செல்வத்தை எல்லாம் இழந்து, மாமனாரிடம் பணமும் சொத்தும் கேட்டு மனைவியைத் துன்புறுத்தினான். பின் வேலன் உதவி செய்து அவனிடம் மணமாற்றம் உண்டாக்கி நல்லபடி வாழ்ந்து வருகிறான்.

**வேலையில்லாத் திண்டாட்டம்**

வேலையில்லா திட்டாண்டம் இன்று மட்டுமல்ல. பத்தொன்பதாம் நூற்றாண்டில் கூட பெரும் சவாலாக இளைஞர்களுக்கு இருந்துள்ளதை, **வர வர வேலையில்லாத் திண்டாட்டம் வளர்கிறது. படிக்காதவர்கள் நன்றாகப் பிழைக்கிறார்கள். பணம்தேட அவர்களுக்கு வழி தெரிகிறது.. படித்தவர்களுக்குத் தெரியவில்லை.**( அகல்விளக்கு, ப.328) என்று மாலன்கூறுவதிலிருந்து அறிய முடிகின்றது.

**அகல்விளக்கு**

இந்நூலின் பெயர் எதை மையமிட்டது என்பதை நூலாசிரியரே இந்நூலில் தெளிவுபடுத்தியுள்ளார். இதனை, **சந்திரனையும் வேலய்யனையும் ஆசிரியர் முரண்பட்ட நிலையில் படைக்கிறார். அரளியையும் தாழையையும் விளக்கிய ஆசிரியர் மனிதரிலும் 'தாழைபோல் அரளிபோல்' சிலர் உள்ளனர் என்ற உண்மையை விளக்குகிறார். சந்திரனுடைய அறிவும் அழகும் தவிர அவனுடைய வாழ்க்கையில் நல்லவை வேறில்லை என்று சந்திரனோடு ஒப்பிடுவார். அவ்வாறே**

**துளசியினை விளக்கி வேலய்யன் நிலையோடு நம்மை ஒப்பிட்டு உணரவைப்பார். 'நீ மண் அகலாக இருந்த காலத்தில் நான் பித்தளை அகலாக இருந்தேன். சிறிது காலம் பளபள என்று மின்னினேன். என் அழகையும் அறிவையும் அப்போது எல்லோரும் விரும்பினார்கள்; பாராட்டினார்கள். என்ன பயன்? வலவல எண்ணெயும் கெட்டது. திரியும் கெட்டது. சிட்டமும் பிடித்தது. ஒளி மங்கியது மங்கிவிட்டேன். நீதான் நேராகச் சுடர்விட்டு அமைதியாக எரியும் ஒளிவிளக்கு என்று திருந்திய நிலையில் சந்திரன் பேசுவது வேலய்யனுக்கும் அவனுக்கும் உள்ள வேறுபாட்டை விளக்குவதோடு புதினத்தினத்தின் பெயர்க் காரணத்தையும் உணர வைக்கிறது.** (வெ. நிர்மலா, ப.245) என்கிறார் நிர்மலா. இதன்வழி நேரான வாழ்க்கை கொண்ட வேலய்யனின் வாழ்வே அகல்விளக்கு என்பதை அறிய முடிகின்றது.

**முடிவுரை**

இளம் வயதினர் தவறான பழக்க வழக்கங்கள், மூடநம்பிக்கைகள், காதல் பற்றிய புரிதலற்ற தன்மை இவற்றால் தங்கள் வாழ்வை இழக்கின்றனர். ஒருவனை அவனின் கல்வியின் தரத்தை வைத்து எடைபோடாமல் அவனின் நடத்தையை வைத்து எடைபோடுவதே சிறப்பு. தவறான புரிதல்களும் தவறான பழக்கங்களும் அவர்களை மட்டும் துன்பத்திற்கு ஆளாக்காமல் அவர்களோடு இருக்கக்கூடிய அனைவரையும் அது துன்பத்தில் ஆழ்த்திவிடும் என்பதற்கு சந்திரனின் வாழ்வே சிறந்த உதாரணம். மூடநம்பிக்கை என்பது மிகப்பெரிய அவலம். அது தன் வாழ்வோடு மட்டுமல்லாமல் தங்கள் குடும்பத்தையும் சீர்குலைய செய்துவிடும் என்பதற்கு மாலனின் வாழ்வே சிறந்த எடுத்துக்காட்டு. நல்ல ஒழுக்கமும் தெளிந்த சிந்தனையும் செய்தொழிலில் பக்தியும் கொண்ட ஒருவன் சிறந்து விளங்குவான் என்பதற்கு சிறந்த எடுத்துக்காட்டு வேலன். இந்நாவல் இளைஞர்களுக்கான சிறந்த வழிகாட்டியாகத் திகழ்கிறது. இதனை இன்றைய இளைய சமுதாயம் வாசித்தால். அவர்களின் வாழ்விலும் நாம் மாற்றங்களைக் காணலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. இளம்பூரணன் கிராமணி. கி, குமார். சி, இடைநிலைப் பள்ளிகளில் மாணவர்களின் சுய சால்புடைமைக் கூறுகளை வலுபடுத்தும் அகல்விளக்கு நாவல், MJSSH, தொகுதி.5, இதழ்.3, July 2021.
2. குருநாதன். இராம, (தொ.ஆ), திருக்குறள் நடைமுறை உரை, டிஸ்கவரி புக் பேலஸ், சென்னை, 2021.
3. சுந்தர சண்முகனார் (உரை), நாலடியார், கௌரா பதிப்பகம், சென்னை, 2021.
4. நிர்மலா. வெ. பன்முகப் பார்வையில் வரதராசனாரின் அகல்விளக்கு, சர்வதேசத் தமிழ் ஆய்விதழ், தொகுதி.4, இதழ்.S7, 2022. DOI: 10.34256/irjt22s738.
5. பாரதிதாசன், குடும்ப விளக்கு, மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2002.
6. வரதராசன். மு, அகல்விளக்கு, பாரி நிலையம், சென்னை, 1995.

## References


1. IlamPuranan Kiramani. K, Kumar.S, Agal Vilakku Novel to strengthen secondary school studends self-esteem Elements, MJSSH, Vol.5, Iss.3, July 2021.
2. Gurunathan. Rama, Thirukkural Nadaimurai Urai, Discovery Book Palace, Chennai, 2021.
3. Sundhara Shamuganar (Urai), Naladiyar, Gowra Pathipagam, Chennai, 2021.
4. Nirmala. V. Multifaceted perspective Varadharasan's Akal Vilakku, International Research Journal of Tamil, Vol.4, Issue.S7, 2022. DOI: 10.34256/irjt22s738.
5. Bharathidasan, Kudumba Vilakku, Manivasagar Pathipagam, Chennai, 2002.
6. Varadharasan. M, Agalvilakku, Pari Nilayam, Chennai, 1995.



License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.